# தென் மாவட்டங்களில் கனமழை : அமைச்சர்கள் - கழகத்தினர் நிவாரணப் பணி!



தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் அமைச்சர் கீதாஜீவன், அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கெலமங்கலம் - ராயக்கோட்டை - ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தனர்!

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் - பொது சுகாதாரத் துறை சார்பில் - 7 மருத்துவக் கட்டிடங்கள்!

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி - மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!

கிருஷ்ணகிரி, டிச. 21-

கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ராயக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், ரூ. 1 கோடியே 26 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட கட்டுமான பணிகளை துவக்கி வைத்தும்,கெலமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், வட்டார பொது சுகாதார அலகு, சீதாராம் நகர் நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகம், குருபரப்பள்ளி நோயாளிகள் காத்திருக்கும் அளை, தொரப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையம், பொதுசுகாதாரத்துறை சார்பில்,ரூ.2 கோடியே 55 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் கெலமங்கலம், புறநோயாளிகள் பிரிவு, பாரூர் வட்டார பொது சுகாதார அலகு, மேகலசின்னம்பள்ளி நல்லூர் துணை சுகாதார நிலையம் என மொத்தம் 7 மருத்துவ கட்டிடங்களை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கே. எம்.சரயு, ஓசூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு.ஒய். பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (19.12.2023) திறந்து வைத்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள்,ஏழை, எளிய மக்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.நகர்புறம், ஊரகம் மற்றும் மலைக்கிராம மக்களுக்கும் அனைத்து வகையான மருத்துவ வசதி கிடைக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்தி வருகிறார்கள். தற்போது 7 மருத்துவ கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எஸ்.முதுகானப்பள்ளி, உனிசெட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையில் சமூக பொறுப்பு நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில்,கொரோனா தொற்று காலத்தில் சமூக பொறுப்பு நிதியிலிருந்து 1 இலட்சம் தடுப்பூசிகள் இலவசமாக பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டது. சிறப்பாக செயல்படக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒன்றிய அரசு வழங்கக்கூடிய தேசிய தர உறுதி நிர்ணய சான்றிதல் விருது என 487 விருதுகள் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாக சென்று தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளை செய்தல், தேவைப்படும் மருந்துகளை வழங்குதல், இயன்முறை சிகிச்சை, இயலா நோயாளிகளுக்கு வழங்கக் கூடிய வலி நிவாரணம், ஆதரவு சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கிய 'மக்களைத் தேடி மருத்துவம்" என்ற திட்டத்தை, நமது கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 5.8.2021 அன்று சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சாமனப்பள்ளி கிராமத்தில் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் கீழ், அரசு பொது மருத்துவ மனைகளில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான புறநோயாளிகள், உள்நோயாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் அனைவருக்கும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்கள், பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவர்களின் இல்லத்திற்கே நேரடியாகச் சென்று மருத்துவச் சேவை அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களை தேடி மருத்துவ முகாம் சாமனப்பள்ளியில் துவக்கி 1 பயனாளிகளுக்கு மருந்து பெட்டகத்தை வழங்கினார். தொடர்ந்து 1 கோடி முடிந்து 1 கோடியே 1 பயனாளிக்கு திருச்சி மாவட்டத்தில் மருந்து பெட்டகத்தை வழங்கினார். இதுவரை மக்களை தேடி மருத்துவம் மூலம் 1 கோடியே 67 இலட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். கிருஷ்ணகிரியில் மருத்துவ கல்லூரி துவக்கப்பட்டு நிலையில், உழைக்கும் வர்கம் மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் கிருஷ்ணகிரியில் இயங்கி வந்த அரசு தலைமை மருத்துவ மனை தற்போது ஓசூருக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே ஓசூர் அரசு தலைமை மருத்துவமணைக்கு விரைவில் ரூ.100 கோடி மதிப்பில் புதிய கட்டிடங்கள் கட்டப்படவுள்ளது.

அதேப்போல கடந்த 2021 ஆம் ஆண்டு மலை கிராமமான பெட்டமுகிளாலம் கிராமத்திற்கு நான் நேரடியாக சென்று பொது மக்களிடம் கோரிக்கை கேட்டறிந்த போது எங்கள் மலை கிராமத்திற்கு 108 ஆம்புலன்ஸ் சேவை வேண்டும் என கோரிக்கை வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சாமனப்பள்ளியில் 108 ஆம்புலன்ஸ் சேவை துவக்கி வைத்தார்கள். தற்போது மலை கிராம மக்களுக்கு மருத்துவ கட்டமைப்பு மேம்படுத்தப் பட்டுள்ளது.

மேலும், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. மேலும், கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி பல்வேறு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்கள் மற்றும் நோயாளிகளின் வசதிக்காக நகரம் மற்றும் கிராமப்புறங்களில் புதியதாகவும், கூடுதலாகவும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், 19.12.2023 அன்று கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், ராயக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், 15 வது நிதிக்குழு சுகாதார மானிய திட்டத்தின் கீழ்,ரூ.1 கோடியே 26 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட கட்டுமான பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து,கெலமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ்,ரூ.60 இலட்சம் மதிப்பில் புறநோயாளிகள் பிரிவு கட்டடிம், 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ்,ரூ.50 இலட்சம் மதிப்பில் பாரூர் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்தையும், மேகலசின்னம்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 15 வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ்,ரூ.50 இலட்சம் மதிப்பில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடத்தையும்,சீத்தாராம்நகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில், 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ்,ரூ.22 இலட்சம் மதிப்பில் நகர்புற பொது சுகாதார ஆய்வக கட்டிடத்தையும், ஓசூர் ஒன்றியம், நல்லூர் கிராமத்தில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ்,ரூ.38 இலட்சத்து 61 ஆயிரம் மதிப்பில் துணை சுகாதார மைய கட்டிடத்தையும்,

மைலான் நிறுவனம் சார்பாக, சமூக பொறுப்பு நிதியின் கீழ், குருபரப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.20 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள நோயாளிகள் காத்திருக்கும் அறை, தொரப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.22 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் புதிய கட்டிடம் என மொத்தம் ரூ.2 கோடியே 55 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் மருத்துவ கட்டிடங்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் ஆகியோர்,50 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும், 100 நபர்களுக்கு இலவச கண் கண்ணாடியும், 200 குழந்தைகளுக்கு பெயருடன் கூடிய பிறப்பு சான்றிதழ் களை வழங்கினார்கள்.

தொடர்ந்து சகி எக்ஸ் போர்ட் தனியார் நிறுவனம் சார்பாக பாகலூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 1 கோடி மதிப்பிலான புற நோயாளிகள் பிரிவு கட்டிடம் கட்டுவதற்காக உத்தரவாத கடிதம் நிறுவன பிரதிநிதிகள் அமைச்சர் பெருமக்களிடம் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில்,கூடுதல் ஆட்சியர் திருமதி. வந்தனா கார்க், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.டி.சினேகா, ஓசூர் சார் ஆட்சியர் செல்வி.பிரியங்கா, இணை இயக்குநர் மரு. புரமசிவன்,துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.கோ.ரமேஷ்குமார்,கெலமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் மரு.சி.ராஜேஸ்குமார், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் மொரப்பூர் பஸ் நிலையத்தில் இனமான பேராசிரியர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இனமான பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார்.உடன் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, அவைத்தலைவர் கே.மனோகரன்,மொரப்பூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் இடிடி.செங்கண்ணன், ஐ.டி.விங் தமிழமுகன்,மற்றும் கழக மாநில,மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,சார்பு அணி பொறுப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கீரைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முடிவுற்ற புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் புதிய செவிலியர் குடியிருப்பு கட்டடத்தினை திறந்து வைத்தும், புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு நேற்று முன்தினம் (19.12.2023) அடிக்கல் நாட்டினார். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி தலைமை வகித்தார்கள். உடன் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் முனைவர். பழனியப்பன், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ம,சாந்தி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.ஆர்.கே.ஜெயந்தி, அரூர் வட்டாட்சியர் வில்சன் ராஜசேகர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி. செண்பகவள்ளி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜி.சேகர் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொடர்புடைய அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.